RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 230 | ஆகஸ்டு.22 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## 100 தொகுதிகளில் 34 நாட்களில் 10 ஆயிரம் கி.மீ. பயணம் செய்து மக்களை சந்தித்த பழனிசாமி

சென்னை, ஆக.22-

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கடந்த 34 நாட்களில் 10,000 கி.மீ. தூரம் பயணம் செய்து, 100 தொகுதிகளில் 'மக்களை காப்போம், தமிழகம் மீட்போம்' பிரச்சாரத்தை நிறைவு செய்துள்ளார். தமிழகம் முழுவதும் சென்று மக்களை சந்திக்கும் வகையில் 'மக்களை காப்போம், தமிழகம் மீட்போம்' என்ற பிரச்சார பயணத்தை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கடந்த ஜூலை 7ம் தேதி தொடங்கினார்.

விவசாயிகள், வியாபாரிகள், நெசவாளர்கள், மீனவர்கள் என பல்வேறு தரப்பினருடன் 150க்கும் மேற்பட்டகலந்துரையாடல்களில் பங்கேற்று அவர்களின் பிரச்சினைகளை நேரடியாக கேட்டறிந்தார். அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள், தீர்வுகளையும் வழங்கினார்.

இந்த சுற்றுப் பயணத்துக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பிரச்சார பேருந்தில் தொடர் பயணம் செய்துவரும் பழனிசாமி, 34 நாட்களில் 10,000 கி.மீ. தூரம் கடந்து, சராசரியாக நாள்தோறும் சுமார் 14 மணி நேரத்தை மக்களிடையே செலவழித்துள்ளார். இதுவரை அவரது பிரச்சாரம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வுகளில் 52 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

மீண்டும் ரூ.2,500 "பழனிசாமியின் எளிமையான பேச்சும், மக்களுடன் இயல்பாக பழகும் தன்மையும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. பயணத்தின்போது, திமுக அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சித்ததோடு, அதிமுகவின் சாதனைகளையும் மக்களிடம் நினைவுபடுத்தினார்.

பொங்கலுக்கு மீண்டும் ரூ.2,500, இலவச வேட்டி சேலை, தீபாவளிக்கு சேலை, ஏழைகளுக்கு கான்கிரீட் வீடுகள் போன்ற வாக்குறுதிகளையும் அளித்துள்ளார். இந்த பயணத்தையொட்டி வெளியான பிரச்சாரப் பாடல்களும் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது'' என்று அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, ஆற்காட்டில் 100 வது தொகுதி பயணத்தை நிறைவு செய்த பழனிசாமி, "இந்த எழுச்சிப் பயணம் தொடக்கம் மட்டுமே. உண்மை, உழைப்புடன் பாடுபட்டு, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வழிகாட்டிய தமிழகத்தை உருவாக்குவோம்'' என்று சூளுரைத்துள்ளார். அவரது இந்த சுற்றுப் பயணம் அதிமுக தொண்டர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தூய்மைப் பணியாளர்கள் சம்பளத்தை குறைக்க கூடாது: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஆக.22-

சென்னை மாநகராட்சியின் 2 மண்டலங்களில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு ஒப்படைக்கும் வகையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்ய முடியாது என உத்தரவிட்டுள்ள உயர் நீதிமன்றம், தூய்மைப் பணியாளர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தை குறைக்காமல் வழங்க வேண்டும் என அறிவுறுத்தி உள்ளது.



சென்னை மாநகராட்சியின் 5, 6வது மண்டலங்களில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்கும் வகையில் மாநகராட்சியில் கடந்த ஜூன் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, தூய்மைப் பணிக்கான ஒப்பந்தத்தை தனியாருக்கு வழங்கியதை கண்டித்து மாநகராட்சி அலுவலகம் முன்பு துப்புரவு பணியாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். 13 நாட்களுக்கு பிறகு, சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்பேரில் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்கும் மாநகராட்சியின் தீர்மானத்தை ரத்து செய்யக் கோரி உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதி கே.சுரேந்தர் முன்பு இந்த வழக்கு விசாரணை ஏற்கெனவே நடந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், ``தூய்மைப் பணியாளர்களை நிரந்தரம் செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கு தொழிலாளர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்த சூழலில், தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்குவதாக இருந்தால் தொழிலாளர் நீதிமன்றத்தின் அனுமதியை பெற வேண்டும். மாநகராட்சியின் தீர்மானத்தால் சுமார் 2 ஆயிரம் ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது'' என்று வாதிடப்பட்டது. மாநகராட்சி தரப்பில், "சென்னை மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களில், ஏற்கெனவே 11 மண்டலங்களில் தூய்மைப் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு தொழிலாளர்களுக்கு தனியார் நிறுவனம் அதிக ஊதியத்துடன், வருங்கால வைப்புநிதி, காப்பீடு போன்ற சலுகைகளுடன் வேலை வழங்கும்'' என்று தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்த நிறுவனம் தரப்பில், "தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பது அரசின் கொள்கை முடிவு. இதில் விதிமீறல் இருந்தால் மட்டுமே நீதிமன்றம் தலையிட முடியும். 1,900 பணியாளர்கள் இன்னும் தேவை என்ற நிலையில் அவர்கள் பணியில் சேருவதற்கான காலக்கெடு ஆகஸ்ட் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவிக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி கே.சுரேந்தர் நேற்று பிறப்பித்துள்ள உத்தரவு: துப்புரவு பணிகளை தனியாரிடம் ஒப்படைக்கும் சென்னை மாநகராட்சியின் தீர்மானத்தை ரத்து செய்ய முடியாது. தூய்மைப் பணியாளர்களை பணியில் சேர்த்துக் கொள்வதற்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்ற அச்சம் தேவையற்றது. எனவே, இது தொடர்பாக சென்னை மாநகராட்சி நிர்வாகம், தனியார் நிறுவனத்துடன் கலந்துபேசி, தூய்மைப் பணியாளர்கள் கடைசியாக பெற்ற ஊதியத்தை குறைக்காமல் வழங்க வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டு, இந்த வழக்கை நீதிபதி முடித்துவைத்தார்.

# பிரதமர், முதல்வர்களை நீக்கம் செய்யும் மசோதா ஒரு திசை திருப்பும் செயல்

சென்னை: ஆக.22-

பிரதமர், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள் வழக்கில் சிக்கி 30 நாட்கள் சிறையில் இருந்தால் அவர்களை நீக்கம் செய்வதற்கான சட்டமசோதா நேற்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை,மக்கள் பிரச்சினையை திசை திருப்ப தாக்கல் செய்துள்ளார்கள். மக்களுடைய கவனத்தை மட்டும் திருப்புவது மட்டுமல்ல, நாட்டையே ஜனநாயக பாதையில் இருந்து திசை திருப்புவதற்காக செய்துள்ளார்கள் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் ரகுமான்கான் எழுதிய நூல்களை வெளியிட்டு ஆற்றிய உரையில் முதல்வர் இவ்வாறாக தெரிவித்தார்.

முதல்வர் பேசியதாவது: நேற்று நாடாளுமன்றத்தில், நாட்டை சர்வாதிகரத்தை நோக்கி நகர்த்த புலனாய்வு அமைப்புகளை வைத்து தங்களுக்கு எதிரானவர்களை பதவி நீக்கம் செய்ய, ஒரு கருப்பு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார் உள்துறை அமைச்சர்.

இதற்கு முன்பு, குடியுரிமை திருத்தச் சட்டம், வக்ஃபு திருத்தச் சட்டம் என சிறுபான்மையின மக்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களை எல்லாம் கொண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் இந்த சட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி கடுமையாக எதிர்த்ததோ, அதேபோல இந்த கருப்பு சட்டத்தை எதிர்ப்போம்.

இதையெல்லாம் அவர்கள் ஏன் செய்கிறார்கள். மக்கள் பிரச்சனையை திசை திருப்ப செய்கிறார்கள். மக்களுடைய கவனத்தை மட்டும் திருப்புவது மட்டுமல்ல, நாட்டையே ஜனநாயக பாதையில் இருந்து திசை திருப்புவதற்காக அதை செய்கிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முன்னதாக நேற்று மசோதா தாக்கலானவுடனேயே முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்தார். அதில், "இந்த, 130வது அரசியல் சட்டத்திருத்தம் என்பது சீர்திருத்தம் அல்ல, இது ஒரு கருப்பு நாள், இது ஒரு கொடுஞ் சட்டம். 30 நாள் கைது என்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரை எந்த விசாரணையும், நீதிமன்றத் தண்டிப்பும் இல்லாமலேயே பதவி நீக்கம் செய்யலாம். பாஜக வைத்ததுதான் சட்டம்..

பிரதமருக்குக் கீழான சர்வாதிகார நாடாக இந்தியாவை மாற்றுவதன் மூலம் மத்திய பாஜக அரசு அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் மக்களாட்சி அடித்தளத்தையும் களங்கப்படுத்த முடிவெடுத்துவிட்டது." என்று கூறியிருந்தார்.

## தேனாம்பேட்டை சைதாப்பேட்டை மேம்பால மதிப்பீடு பற்றி விசாரணை தேவை: அன்புமணி

சென்னை, ஆக.22-

ஒரு கி.மீ பாலம் அமைக்க ரூ.195 கோடியா? தேனாம்பேட்டை சைதாப்பேட்டை மேம்பால மதிப்பீடு பற்றி விசாரணை நடத்த வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 3.2 கி.மீ தொலைவுக்கு உயர்மட்ட மேம்பாலம் அமைக்க ரூ.621 கோடி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும், சராசரியாக ஒரு கி.மீக்கு ரூ.195 கோடி செலவாவதாகவும் தமிழக அரசால் கணக்குக் காட்டப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.



வழக்கமாக இத்தகைய மேம்பாலங்களை அமைப்பதற்கான செலவை விட திட்ட மதிப்பீடு 50% கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதை ஏற்க முடியாது. சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில், தேனாம்பேட்டை தொடங்கி சைதாப்பேட்டை வரை மொத்தம் 3.21 கி.மீ தொலைவுக்கு 4 வழி உயர்மட்டச் சாலை தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பாலம் அமைப்பதற்கான திட்டச் செலவு ரூ.621 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் அதிக மதிப்பீடு ஆகும். இந்த மதிப்பீடு பல வகையான ஐயங்களை எழுப்புகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் சென்னையில் கட்டப்பட்ட பாலங்களின் திட்டச் செலவை விட இந்தப் பாலத்தின் செலவு கிட்டத்தட்ட இரு மடங்காக உள்ளது. 2021 ஆம் ஆண்டு கோயம்பேடு பேருந்து நிலையம் முன்பாக கட்டப்பட்ட பாலத்திற்கு கி.மீக்கு ரூ.95 கோடியும், 2022 ஆம் ஆண்டு மேடவாக்கத்தில் கட்டப்பட்ட பாலத்திற்கு கி.மீக்கு ரூ.101 கோடியும் மட்டும் தான் செலவாகியுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் மூலம் கட்டப்படும் மேம்பாலங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் கட்டப்படும் மேம்பாலங்களை விட தரத்திலும் வடிவமைப்பிலும் சிறப்பானதாக இருக்கும் என்பதால் அவற்றின் கட்டுமானச் செலவு சற்று அதிகமாகவே இருக்கும்.

ஆனால், தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மூலம் கட்டப்பட்ட மதுரை - நத்தம் மேம்பாலம் சராசரியாக கி.மீக்கு ரூ.100 கோடி செலவில் தான் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை மேம்பாலம் அதை விட 95% செலவில் கட்டப்பட்டு வருவது ஏன்? என்பது தான் வினா.

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் மூலம் கிளாம்பாக்கம், மறைமலை நகர், மதுரவாயல், சென்னை வெளிவட்டச்சாலை இடையேயும், திருப்பெரும்புதூர் - சென்னை வெளிவட்டச் சாலை ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் கட்டப்படவுள்ளன. தலா 6 வழிப்பாதையும், 3 இடங்களில் மேம்பாலத்தில் ஏறி, இறங்கும் வசதிகளும் கொண்ட இந்த மேம்பாலத் திட்டங்களுக்கு முறையே கி.மீக்கு ரூ.188 கோடி, ரூ.175 கோடி, ரூ.155 கோடி தான் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அவற்றை விட குறைவாக 4 வழிப் பாதையாக கட்டப்படும் தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை பாலத்திற்கு அதிக செலவாவது நியாயமல்ல.

சென்னை அண்ணா சாலைக்கு அடியில் மேட்ரோ தொடர்வண்டி பாதை அமைந்துள்ள நிலையில், அதன் மீது தூண்களையும், பாலத்தையும் அமைக்க நவீன தொழில்நுட்பங்கள் தேவை என்பதிலும், அப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்பதிலும் ஐயமில்லை. அதற்காக இயல்பை விட அதிக செலவாகும் என்பதிலும் ஐயமில்லை.

ஆனால், அந்தக் கூடுதல் செலவு இயல்பை விட 50% அதிகம் என்பதைத் தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிலர் லாபமடைய வேண்டும் என்பதற்காகவே திட்ட மதிப்பு உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதுமட்டுமின்றி, தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை மேம்பாலத்திற்கான திட்ட மதிப்பீடு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரூ.482 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அடுத்த ஓராண்டில், அதாவது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் திட்ட மதிப்பீடு ரூ.43 கோடி மட்டும் அதிகரிக்கப்பட்டு ரூ.525 கோடியாக உயர்த்தப் பட்டது. ஆனால், அடுத்த ஓராண்டுக்குள்ளாக திட்ட மதிப்பீடு 18%, அதாவது ரூ.96 கோடி அதிகரிக்கப்பட்டு, ரூ.621 கோடியாக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு இரு ஆண்டுகளில் 29% அளவுக்கு அதிகரிக்கப்பட்டதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இதன் பின்னணி என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மக்கள் வரிப்பணத்தில் ஒரு ரூபாய் கூட சுரண்டப்படுவதை அனுமதிக்க முடியாது. தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை உயர்மட்ட மேம்பாலத்திற்கான திட்ட மதிப்பு இயல்பை விட 50%க்கும் கூடுதலாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது குறித்து உயர்மட்ட விசாரணை நடத்த அரசு ஆணையிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்'' இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## 1538 டன் அரிசியை வீணாக்கிய அதிகாரிகள்: சட்டசபை குழு ஆய்வில் அதிர்ச்சி

தஞ்சாவூர்: ஆக.22-

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் சட்டசபை குழுவினர் மேற்கொண்ட ஆய்வில், 1538 டன் அரிசியை அதிகாரிகள் வீணாக்கியது அம்பலமானது. இதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி, அரசுக்கு சட்டசபை குழுவினர் பரிந்துரை செய்துள்ளனர். தஞ்சாவூர் பிள்ளையார்பட்டியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான சேமிப்பு கிடங்கு அமைந்துள்ளது.



இங்கு அரசு சார்பில் அனுப்பி வைக்கப்படும் அரிசி மூட்டைகள் இருப்பு வைக்கப்படுவது வழக்கம். இன்று காலை, சட்டசபை உறுப்பினர்கள் அடங்கிய பொது நிறுவனங்களின் ஆய்வு குழுவினர் இந்த கிடங்குக்கு வந்தனர்.

இருப்பு வைக்கப்பட்டுள்ள அரிசி மூட்டைகளின் தரத்தை ஆய்வு செய்தனர். அதில் கடந்த 2022ம் ஆண்டு இருப்பு வைக்கப்பட்ட 1,538 டன் அரிசி, மனிதர்கள் உண்பதற்கு தகுதியற்றதாக இருப்பது கண்டறியப்பட்டது.

அந்த அரிசியை கால்நடை தீவனத்துக்கு வழங்க, சட்டசபை குழுவினர் பரிந்துரை செய்தனர். மேலும், இருப்பு வைத்த அரிசியை உரிய காலத்தில் மக்களுக்கு வினியோகம் செய்யாமல், அதன் தரம் குறைவதற்கு காரணமான அதிகாரிகளை கண்டறிந்து, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழுவினர் தெரிவித்தனர். அதன்படி அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்று குழுவின் தலைவரும், எம்எல்ஏவுமான நந்தகுமார் தெரிவித்தார்.

# தமிழ்நாடு முதலமைச்சரின் நான் முதல்வன் உயர்வுக்கு படி திட்டத்தினை பயன்படுத்தி வாழ்வில் ஏற்றம் பெறவேண்டுமென 12ம்வகுப்பு முடித்த மாணவ மாணவர்களை கேட்டுக்கொள்கிறேன் : மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பேச்சு

கன்னியாகுமரி, ஆக.22-

கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், பள்ளிக்கல்வித்துறை, வேலைவாய்ப்பு துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் "நான் முதல்வன் உயர்வுக்கு படி" திட்ட முகாமானது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நாகர்கோவில் பொன் ஜெஸ்லி பொறியியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, மாணவ மாணவியர்களிடையே பேசுகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி "நான் முதல்வன் உயர்வுக்கு படி" என்ற திட்டத்தின் கீழ் 2023 2024 மற்றும் 20242025 கல்வியாண்டில் 12ம் வகுப்பில் தேர்ச்சிபெறாத, தேர்வு எழுதாத, மற்றும் உயர்கல்வி படிப்பதற்கு விண்ணப்பிக்காத மாணவர்களை கண்டறிந்து, அவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்குவதோடு, இன்று 12 மாவட்டங்களில் இந்த உன்னதமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தள்ளார்கள். இதில் நமது கன்னியாகுமரி மாவட்டமாகும் ஒன்றாகும்.

நமது மாவட்டத்தில் 2024 2025ம் கல்வி ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்ற 21917 மாணவ மாணவியர்கள் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியதில், 21,262 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அரசுப்பள்ளியை சேர்ந்த 5936 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுதியுள்ளார்கள். அவர்களில் 5643 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்ச்சி பெற்ற 2536 மாணவ மாணவியர்கள் கல்லூரியில் சேர வில்லை. இதனை கருத்தில் கொண்டுதான் நான் முதல்வன் உயர்வுக்கு படி என்ற நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு அரசின் உயர் கல்வித்துறையின் நெறிமுறைகளின் படி நம் மாணவ மாணவியர்கள் 100 சதவீத கல்லூரி படிப்பினை பெற வேண்டும் என்ற நோக்கில் செயல்படுத்தப்பட்டு, இங்கு 800 மாணவ மாணவியர்கள் வந்துள்ளீர்கள். உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இம்முகாமின் மூலம், எந்த கல்லூரியை தெரிவு செய்வது மற்றும் எந்த கல்லூரியில் படித்தால் அரசின் நல திட்டங்களை முழுமையாக மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும், சிறந்த கல்லூரியை தெரிவு செய்வது எப்படி, மற்றும் சிறந்த கல்லூரியில் படிப்பதினால் எத்தகைய வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள இயலும் என்பது சார்ந்த வழிகாட்டுதல்கள் மற்றும் மாணவர்களின் ஐயங்கள் சார்ந்த தெளிவுரைகள் வழங்கப்படும். உயர்கல்வியை தொடர்வதற்கான வங்கி கடன் சார்ந்த தெளிவுரைகளும் இப்பயிற்சி மூலம் வழங்கப்படும்.




மேலும் மாணவர்கள் தேர்வு செய்து, சேர விரும்பும் கல்லூரிகள் அரசு அங்கீகாரம் பெற்றுள்ளதா என கேட்டு, தெரிந்து கொண்டபின் நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். வடநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்க விரும்பும் மாணவர்கள் போலி விளம்பரங்களை கண்டு ஏமாற வேண்டாம். பி.எஸ்.சி நர்சிங் படித்தால் தேசிய மருத்துவ கழகத்திற்குட்பட்ட மருத்துவமனைகள் மற்றும் தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் காலி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது Staff Nurse பணியில் அமர்த்தப்படுவார்கள்.

மருத்துவ கல்வி நிறுவனங்களில் 2 ஆண்டு மருத்துவ டிப்ளோமா படிப்புகள் மற்றும் ஓர் ஆண்டு மருத்துவ சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றது. இதில் சேர்வதற்க்காக தமிழ்நாடு அரசு தனி கவுன்சிலிங் நடத்துகின்றது. 12ம் வகுப்பில் இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடத்தில் எடுத்த மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும். மருத்துவ துறையில் பிஎஸ்சி இதயம் சார்ந்த தொழில்நுட்பம், பி.எஸ்சி விபத்து மற்றும் அவசர சிகிச்சை தொழில்நுட்பம், பிஎஸ்சி டயாலசிஸ் டெக்னாலஜி உள்ளிட்ட பல்வேறு படிப்புகள் உள்ளன. இந்தியாவை பொறுத்தவரையில் எய்ம்ஸ் உள்ளிட்ட முன்னனி மருத்துவமனைகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பணி வாய்ப்பை பெறமுடியும். இதேபோன்று பொறியியல் படிப்புகள், கலை மற்றும் அறிவியல் படிப்புகள் ஏராளமாக உள்ளன. உங்களுக்கு விருப்பமான படிப்பை தேர்ந்தெடுத்து, படியுங்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாணவ மாணவியர்கள் தங்கி சிறப்பாக கல்வி பயில விடுதிகள் இயங்கி வருகிறது. விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி பயிலுவதற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும் 12ம்வகுப்பு தவறிய மாணவ மாணவியர்கள் ஐடிஐ மற்றும் தொழில்நுட்ப படிப்புகளில் சேர்ந்து பயின்று, பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் சேர்ந்து பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். தொடர்ந்து அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்ற மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்புதல்வன் கல்வி உதவித்தொகை, 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் கல்வி உதவித்தொகை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருவதோடு, பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கல்வி பயில மாதம் ரூ.2000 உதவித்தொகையும், மாணவ மாணவிகளுக்கு விடுதி வசதிகள் உள்ளிட்ட அனைத்து நலத்திட்டங்களும் வழங்கப்படும். உயர்கல்வி பயில்கின்ற மாணவர்கள் அனைத்து துறைகளை பற்றிய பயன்பாடுகள் அறிந்துக்கொள்ளும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. உயர்கல்வி பயில்வதற்கு வங்கி கல்விக்கடன் வழங்குவதற்கு அனைத்து வங்கிகள் சார்பில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மூலம் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்குகளை நீங்கள் பார்வையிட்டு, அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். கல்வி பயில விரும்பம் உள்ள மாணவ மாணவியர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக உயர்கல்வி பயில தடை ஏற்பட்டால் அவர்கள் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் அவர்களை தொடர்பு கொண்டால், தங்களது படிப்பை தொடர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள். 50 சதவீத த்திற்கு கீழ் வளர்ச்சி குன்றிய மாற்றுத்திறன் மாணவர்களும் இந்த முகாமில், அவர்கள் விரும்பிய படிப்பிற்கு விண்ணப்பித்து, சேர்க்கையினை உறுதி செய்திடுங்கள். மேற்படிப்பு பயில விரும்பும் நமது மாவட்டத்திற்குட்பட்ட மாணவ மாணவியர்கள் கல்வி கடன் பெற ரூ.100 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை ரூ.28 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள மாணவ மாணவியர்கள் கல்வி கடன் பெறுவதற்கு விண்ணப்பித்து, கடன் பெறலாம்.

மருத்துவம் சார்ந்த படிப்புகள், பொறியியல் சார்ந்த படிப்புகள், பாராமெடிக்கல், தொழில்நுட்ப படிப்புகள் உள்ளிட்ட அனைத்து உயர்கல்வி படிப்பதற்கு, மாணவ மாணவியர்களாகிய நீங்கள் இன்றே உங்களுக்கான கல்வியை தேர்ந்ததெடுத்து, உடனடியாக சேர்க்கை (Spot Admission) உறுதி செய்துக் கொள்ள வேண்டும். மேலும் வருகைபுரி ந்துள்ள நீங்கள் அனைவரும் கல்லூரிப்படிப்பை முடித்தவுடன் பணியில் சேருவதற்கான திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனவே மாணவ மாணவியர்கள் அனைவரும் உங்களுடைய கவனத்தை சிதறடிக்காமல் ஒரே சிந்தனையுடன் கல்வி பயில வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். பள்ளி படிப்பை முடித்த மாணவ மாணவியர்களின் உயர்கல்வி பயில மாவட்ட நிர்வாகம் உறுதுணையாக இருக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் உயர்வுக்கு படி திட்டத்தினை பயன்படுத்தி வாழ்வில் ஏற்றம் பெறவேண்டுமென 12ம்வகுப்பு முடித்த மாணவ மாணவர்களை கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட சமூகநலத்துறை, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், அரசு கலை மற்றும் அறிவயில் கல்லூரி முதல்வர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர், கோணம் தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் உள்ளிட்டவர்கள் துறை சார்ந்த திட்டங்கள் குறித்தும் படிப்புகள் குறித்தும் மாணவ மாணவியர்களிடையே பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.பாலதாண்டாயுதபாணி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.மோகனா, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.விஜயமீனா, உதவி இயக்குநர் (திறன் மேம்பாடு) திரு.லட்சுமி காந்தன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.செல்வராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.செந்தூர் ராஜன், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திரு.தினேஷ் சந்திரன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ஆறுமுக வெங்கடேஷ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திருமதி.சகிலாபாணு, அகஸ்தீஸ்வரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் சரோஜா, துறை அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள், வங்கியாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## குடியாத்தம், ஸ்ரீ அபிராமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழக அரசின் தமிழ்க் கனவு நிகழ்ச்சி

வேலூர், ஆக.22-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கீழ்ஆலத்தூர், குடியாத்தம், ஸ்ரீ அபிராமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழக அரசின் தமிழ்க் கனவு நிகழ்ச்சி, வேலூர் மண்டல கல்லூரிகள் இணை இயக்குனர் அ.மலர் தலைமையில் நடைபெற்றது. முத்துரங்கம் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். ஸ்ரீதர் வரவேற்புரையாற்றுகையில், முத்துரங்கம் கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர். க. தமிழ்ச் செல்வன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து சிறப்பித்தனர்.

வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். மாலதி கலந்துகொண்டு நோக்கம் மற்றும் திட்ட விளக்க சிறப்புரையாற்றி சிறப்பித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக கவிஞர். யுகபாரதி கலந்து கொண்டு கல்வியே ஆயுதம் என்ற தலைப்பில் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை குறித்து சிறப்புரையாற்றினார்.






சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீ அபிராமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் கே. ஜோதிராம் மற்றும் குடியாத்தம் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இநிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ மாணவியரின் வினா விடை மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டது. இந்த தமிழ் கனவு நிகழ்ச்சியில் தமிழ் துறை சார்ந்த பேராசிரியர்கள் அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் நாட்டுப்பண் பாடப்பட்டு, ஸ்ரீ அபிராமி மகளிர் கலை மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் எம்.சி. சுபாஷினி நன்றியாரையாற்றி தமிழ்க் கனவு நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

## அனைத்து வரி விதிப்பு தொடர்பான மாதாந்திர சிறப்பு முகாம் நடைபெறுகிறது

மதுரை, ஆக.22-

மதுரை மாநகராட்சி 100 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் வசதிக்காக சொத்து வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி விதித்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்காக சிறப்பு முகாம் 25.08.2025 (திங்கட் கிழமை) மற்றும் 26.08.2025 (செவ்வாய்கிழமை) ஆகிய இரண்டு நாட்களில் மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பில்லர் ஹாலில் காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் ஏற்கனவே வழங்கியுள்ள சேவைகளுடன், குடியிருப்பு உபயோகத்திலிருந்து வணிக பயன்பாட்டிற்கு சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் ஏற்கனவே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டிடங்களில் கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டு இருந்தால் சொத்தின் உரிமையாளர்கள் சுயகணக்கீட்டு படிவத்தில் கட்டிட சதுரடி விவரங்களை பூர்த்தி செய்து விண்ணப்பித்து பயன்பெறலாம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த அனைத்து வரி விதிப்பு சிறப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மதுரை மாநகராட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

## எச்ஏஎல் நிறுவனத்திடமிருந்து ரூ.62,000 கோடிக்கு 97 தேஜஸ் 1ஏ போர் விமானங்கள் வாங்க ஒப்புதல்

புதுடெல்லி, ஆக.22-

இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.62,000 கோடி மதிப்பில் 97 தேஜஸ் மார்க் 1ஏ ரக போர் விமானங்களை வாங்க மத்திய அரசு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. விமானப்படையில் உள்ள பழைய மிக் 21 ரக போர் விமானங்களுக்கு மாற்றாக உள்நாட்டு தயாரிப்பான தேஜஸ் இலகு ரக போர் விமானங்கள் சேர்க்கப்படுகின்றன.

விமானப்படையில் ஏற்கெனவே 40 தேஜஸ் போர் விமானங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. அதன்பின்பு ரூ.48,000 கோடி மதிப்பில் 83 தேஜஸ் மார்க் 1ஏ ரக விமானங்களை வாங்க மத்திய அரசு ஆர்டர் கொடுத்தது. இந்த விமானங்களுக்கான இன்ஜினை வழங்குவதில், அமெரிக்கா தாமதம் செய்ததால், இதன் விநியோகம் குறித்த நேரத்தில் நடைபெறவில்லை.

இதுகுறித்து விமானப் படை தளபதி ஏற்கெனவே அதிருப்தி தெரிவித்திருந்தார். அமெரிக்காவிடம் இருந்து விமான இன்ஜின் வந்ததும் தேஜஸ் போர் விமானங்கள் விநியோகிக்கப்படும் என எச்ஏஎல் நிறுவனம் உறுதியளித்தது. தேஜஸ் போர் விமானங்களின் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டாலும், எச்ஏஎல் நிறுவனத்தின் உள்நாட்டு தயாரிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்பதில் பிரதமர் மோடி உறுதியாக உள்ளார்.

அவரும் தேஜஸ் பயிற்சி விமானத்தில் பறந்தார். இந்நிலையில் தற்போது ரூ.62,000 கோடி மதிப்பில் மேலும் 97 தேஜஸ் மார்க் 1ஏ ரக போர் விமானங்களை எச்ஏஎல் நிறுவனம் தயாரிக்க மத்திய அரசு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 65 சதவீதத்துக்கும் மேல் உள்நாட்டு தயாரிப்பு பொருட்கள் பயன்படுத்தப்படவுள்ளன. 200 தேஜஸ் மார்க் 2ஏ ரக போர் விமானங்கள் மற்றும் 5ம் தலைமுறை போர் விமானங்கள் தயாரிப்பதற்கான ஒப்பந்தங்களை பெறவும் எச்ஏஎல் நிறுவனம் தயாராகி வருகிறது.

## 3 நாட்களுக்கு மேலாக தொடரும் போக்குவரத்து ஊழியர் போராட்டம்: சென்னையில் 7 இடங்களில் நடைபெற்றது

சென்னை, ஆக.22-

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து ஊழியர்கள் தமிழகம் முழுவதும் நடத்திவரும் போராட்டம் நேற்றும் நடைபெற்றது. போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வு பெற்றவர்களுக்கு பணப்பலன் வழங்கக் கோரி தமிழகம் முழுவதும் கடந்த 18ம் தேதி முதல் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடி வருகின்றனர்.

காத்திருப்புப் போராட்டம், சாலை மறியல், ஆர்ப்பாட்டம் என பல்வேறு வகைகளில் போராடுபவர்களை காவல் துறை கைதுசெய்து வருகிறது. அந்த வகையில் நேற்றும் போராட்டம் நீடித்தது. சென்னையில் தாம்பரம், வடபழனி உள்ளிட்ட 7 பணிமனைகளில் தொழிலாளர்களின் காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதில் சிஐடியு போக்குவரத்து சங்கத்தை சார்ந்த ஆறுமுகநயினார், தயானந்தம், துரை, பாலாஜி, சசிகுமார் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அவர்கள் கூறும் போது, "போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பலனை தீபாவளிக்கு முன்பாக அளிக்க வலியுறுத்துகிறோம்.

அல்லது எப்போது வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தையாவது அளிக்க வேண்டும். எங்களின் கோரிக்கையை நிறைவேறாவிட்டால் தீபாவளி வரை தொடர் போராட்டம் நடத்தப்படும்" என்றனர்.

## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக குழந்தை விஞ்ஞானிகளை உருவாக்கும் வழிகாட்டி ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம்

காளையார் கோவில், ஆக.22-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக அனைத்து மாணவர்களிடமும் அறிவியல் மனப்பான்மையை எடுத்துச் செல்லும் விதமாக 6 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் 17 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளையும் அறிவியல் விஞ்ஞானிகளாக மாற்றும் குழந்தைகள் அறிவியல் மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் காளையார்கோவில் கூட்டரங்கில் இந்த ஆண்டிற்கான கருப்பொருளான "நீடித்த பாதுகாப்பான நீர் மேலாண்மை" என்னும் தலைப்பில் சிவகங்கை மானாமதுரை காளையார் கோவில் இளையான்குடி ஒன்றியங்களில் பணியாற்றும் 100க்கு மேற்பட்ட வழிகாட்டி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.




தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் தலைமை வகித்தார். காளையார் கோவில் கிளைத் தலைவர் வீரபாண்டி சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் முன்னிலை வகித்தனர். காளையார்கோவில் கிளைச் செயலாளர் அலெக்ஸாண்டர் துரை வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க செயலாளர் மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி அறிமுக உரையாற்றினர். மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் காளையார்கோவில் முதல்வர் முருகன் அறிவியல் வழிக்காட்டி ஆசிரியர்களுக்கான பயிற்சியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஆய்வுக் குறித்து குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாநில ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் கருத்துரையாற்றினார். பயிற்சியில் நீரினால் பரவும் நோய்கள், நீர் பாதுகாப்பில் பாரம்பரிய நவீன தொழில்நுட்ப யுத்திகள், நீர் சார்ந்த சுகாதாரம் பொது மருத்துவம், நீர் சூழலும் பாதுகாப்பும், நீர் அனைவருக்குமானது என்ற தலைப்புகளில் முனைவர் சேவற்கொடியோன் முனைவர் சூசை ஆரோக்கிய மலர் சியாமளா முனைவர் மணிவண்ணன் முனைவர் கோபிநாத் காளிதாஸ் பிரபு ஆரோக்கியசாமி ஆகியோர் ஆய்வறிக்கை தயாரிப்பதற்கான வழிமுறைகளை செயலாக்கம் கொடுத்து கருத்தாளர்களாக செயல்பட்டனர். காளையார்கோவில் வட்டாரக் கல்வி அலுவலர்கள் லதாதேவி பொன்னி வாழ்த்துரை வழங்கினர். மாவட்டக் கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் நன்றி கூறினார். குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவற்கொடியோன் மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தனர்.



■ பொதுவுடமை வீரர் பா.ஜீவானந்தம் அவர்களின் 119வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் தி.அழகுமீனா, நாகர்கோவில், வேப்பமூடு சந்திப்பில் அமைந்துள்ள ஜீவா நினைவு மண்டபத்திலுள்ள, அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் .என்.சுரேஷ்ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் உட்பட பலர் உள்ளனர்.





# ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை மேயர் இந்திராணி பொன்வசந்த் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி பூமிநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்

மதுரை, ஆக.22-

மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.53, 85 ஆகிய பகுதிகளுக்கு தெற்கு வாசல் மீனாட்சி தியேட்டரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.தளபதி அவர்கள், திரு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாமினை கடந்த 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்து உள்ளார்கள். அதன் தொடர் நிகழ்வாக மதுரை மாநகராட்சியில் கடந்த 17.07.2025, 24.07.2025, 31.7.2025, 02.08.2025, 07.08.2025, 08.08.2025, 12.08.2025, 14.08.2025, 19.08.2025 மற்றும் 20.08.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர். அதனை தொடர்ந்து இன்று (21.08.2025) மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (வார்டு எண்.53, 85) தெற்குவாசல் மீனாட்சி தியேட்டரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை மாண்புமிகு மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வில் மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், கண்காணிப்பாளர் திரு.பாலசுப்பிரமணியன், உதவி வருவாய் அலுவலர் ஆனந்தம், மாமன்ற உறுப்பினர்கள் அருண்குமார், முத்துமாரி உட்பட அனைத்து துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ மதுரை உத்தங்குடி ஜே.எப்.ஏ. லக்கி பேலஸ் மண்டபத்தில் பதிவுத்துறையின் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்கள் தனித்துணை ஆட்சியர்கள் (முத்திரை), உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் மதுரை மண்டல பதிவுத்துறை அலுவலர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ் இ.ஆ.ப., அவர்கள், பதிவுத்துறை தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# திருக்குறள் பயிற்சி வகுப்புகளில் பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளிகல்லூரி மாணாக்கர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்று பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஆக.22-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 31.12.2024 ஆம் தேதியன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியில், “ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திருக்குறளில் ஆர்வமும், புலமையும் மிக்க ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி வழங்கி மாவட்டந்தோறும் தொடர் பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். ‘திருக்குறள் திருப்பணிகள்’ தொடர்ந்து நடைபெற திட்டம் வகுக்கப்படும். இதற்காக ஆண்டிற்கு மாவட்டம் ஒன்றிற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்” என அறிவிக்கப்பட்டது. மேலும், தமிழ் வளர்ச்சித்துறை வாயிலாக செயற்படுத்தப்படும் குறள் பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் நோக்குடனும், பொதுமக்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்திடவும் “திருக்குறள் திருப்பணிகள்” குறித்த அறிவிப்பினை 2025 2026ஆம் நிதியாண்டு முதல் செயற்படுத்திடுவதற்கு சிவகங்கை மாவட்ட அளவில் தலைவர் மற்றும் உறுப்பினர்களை கொண்ட திருக்குறள் திருப்பணிகள் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்கண்காணிப்புக்குழு வாயிலாக, நுண்பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பெற்று, மூன்று குழுக்கள் ஒரு வாரத்தில் அரை நாள் வீதம் ஆண்டுக்கு 30 வாரங்கள் திருக்குறள் பயிற்சி வகுப்புகள், பயிலரங்குகள் நடத்தப்படவுள்ளது.

மேலும், பயிற்சி நடைபெறுமிடம், நாள், நேரம் குறித்த முழு விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயற்பட்டு வரும், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04575241487 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம். பயிற்சிக்கட்டணம் ஏதுமின்றி நடத்தப்பெறும் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டவர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே, திருக்குறள் பயிற்சி வகுப்புகளில் பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளிகல்லூரி மாணாக்கர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.




# செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலந்தாய்வு கூட்டம்

தாம்பரம், ஆக.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அதன் செயல் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பாக தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலசந்தர், மற்றும் துணை ஆணையாளர் எஸ்.சசிகலா அவர்கள் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வு கூட்டத்தில் மாநகராட்சி வருவாய் துறை, செயற்பொறியாளர்கள், காவல் துறை, மின்சார வாரியம், நெடுஞ்சாலை துறை, தீயணைப்புத் துறை, சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து காவல் துறை , கழிவுநீர் அகற்று வாரியம் துறை , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் துறை, பொது சுகாதார துறை , மீன்வளத்துறை, தமிழ்நாடு வனத்துறை , சென்னை குடிநீர் வழங்கல்துறை போன்ற அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி, ஆக.22-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஜூலை 2025 மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பெறப்பட்ட 142 மனுக்களுக்கான பதில்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) அணைகளில் நீர்நிலை மற்றும் மழை விபரங்கள் குறித்து தெரிவித்தார். குருந்தன்கோடு வட்டாரம் மணவாளக்குறிச்சியை சேர்ந்த விவசாயி அகஸ்டின் அவர்களின் மண்புழு அங்கக உர தயாரிப்பின் வெற்றிக்கதை காணொளி காட்சி மூலம் விளக்கப்பட்டது. மேலும் நெற்பயிரில் மீன் அமில கரைசல் தெளிப்பதால் உயர் விளைச்சல் பெற்றதாக அதே விவசாயி தெரிவித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் பேச்சிப்பாறையிலிருந்து இணை பேராசிரியர் ரப்பர் தோட்டங்களில் ஊடுபயிர்களை சாகுபடி செய்திட தேவையான விளக்கங்களை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

26.08.2025 அன்று ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் வேளாண் துறை ஸ்ரீ அட்மா நடத்தும் உயிர்ம வேளாண்மை தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்த கருத்துகாட்சியில் அனைத்து விவசாயிகளும் பங்குபெற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்பட்டது. தோட்டக்கலை ஸ்ரீ மலைப்பயிர்கள் துறை மூலம் மரக்கன்றுகள், செடிகள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் விதைகள் விவசாயிகளுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது.

பயிர்க்கடன் பெறும் விவசாயிகள் உரங்கள் வாங்கிட அரசு வகுத்துள்ள நெறிமுறைகள் குறித்து கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் விளக்கினார். கன்னிப்பூ பருவத்திற்கான நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 25.08.2025 முதல் திறந்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் நீர்வளத்துறை மூலம் சானல்களில் தண்ணீர் வரத்து மற்றும் குளங்களை தூர்வாருதல், நீர்நிலைகளை பராமரித்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற கேள்விகளுக்கு பதில்கள் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அனுமதியின்றி அரசு நிலங்களில் உள்ள மரங்களை வெட்டுபவர்கள்மீது வரும் காலங்களில் மிக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்கள். விவசாயிகளும் பொதுமக்களும் தங்கள் பகுதியில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெற்றிடுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார்மீனா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி. சிவகாமி, வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.ஜெனின் பிரபாகர், நீர்வளத்துறை செயற்பொறியாளர் திருமதி.வசந்தி, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.நக்கீரன், மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் திருமதி. பாரதி, அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# வேளாண்மை அறிவியல் நிலையம் திருப்பதிசாரத்தில் நான்முதல்வன் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கான புறக்கடை கோழி பண்ணை திறன் பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்துகொண்டார்கள்

கன்னியாகுமரி, ஆக.22-

கன்னியாகுமரி மாவட்டம் திருப்பதிசாரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்று வரும் புறக்கடை கோழி பண்ணை திறன் பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்துகொண்டார்கள்.

இப்பயிற்சி வகுப்பு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்

வேளாண்மை அறிவியல் நிலையம் திருப்பதிசாரத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிதியுதவியுடன் புறக்கடை கோழி பண்ணையாளர் பயிற்சி நடத்தப்பட்டது. தமிழ்நாடு அரசால் இளைஞர் களுக்காக செயல்படுத்தப்படும் நான் முதல்வன் திட்டத்தில் புறக்கடை கோழி பண்ணையாளர் பயிற்சி 16.07.2025 முதல் நடைபெற்று வருகிறது. பயிற்சியானது முடிவடைகிறது. பயிற்சிகள் 26 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது.



இப்பயிற்சியில் புறக்கடை கோழி வளர்ப்பு தொழிலின் முக்கியத்துவம், கோழிப்பண்ணைத் தொழிலில் வாய்ப்புகள் மற்றும் தற்போதைய தேவை நிலை பற்றிய விளக்கங்கள் 25 தொடக்கநிலை அறிமுக பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

தொழில்முனைவோருக்கான இப்பயிற்சியில் கோழிப்பண்ணை தயாரித்தல், பல்வேறு வகையான கோழிப்பண்ணைகளுடன் கூடிய கோழிப்பண்ணையின் ஸ்தாபனம் மற்றும் தரநிலைகள், கோழிப்பண்ணை பராமரிப்பு பற்றிய விளக்கங்களும் செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. மேலும் கோழிகளின் ஆரோக்கியம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் தரங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம், பண்ணைகளுக்கு இடையேயான தீவனம், உபகரணங்கள் மற்றும் மனிதர்கள் மற்றும் பொருட்களின் இயக்கம் பரிமாற்றத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய உயிரியல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகள், தொழில்துறை தரநிலைகளின்படி கழிவுகளை அகற்றுவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் சுற்றுச்சூழல் நட்பு முறைகள் கையாளுவதற்கும் பற்றுவிக்கப்பட்டது.

மேலும் குஞ்சுகள்/பறவைகளைப் பெறுவதற்கும் நிர்வகிப்பதற்கும் கோழி கொட்டகையைப் பராமரித்தல், வெவ்வேறு காலநிலை நிலைமைகளுக்கு ஏற்ப பின்பற்ற வேண்டிய மேலாண்மை நடைமுறைகள், பறவைகளின் மன அழுத்தம், இயல்பான/அசாதாரண நடத்தை மற்றும் அதன் தணிப்பு முறைகளின் அறிகுறிகளை அடையாளம் காணுதல், குஞ்சுகள் மற்றும் பறவைகளின் வருகை மற்றும் இனப்பெருக்கத்தின் போது சாதகமான சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட செயல்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் கோழிகளுக்கு உணவளித்தல் மற்றும் நீர்ப்பாசனம் செய்தல், பெறப்பட்ட தீவனம் மற்றும் சேமிக்கப்பட்ட தீவனத்திற்கான தர அளவுருவை சரிபார்த்தல் உள்ளிட்டவைகள் குறித்து விளக்கப்பட்டது. ஈரப்பதம் அல்லது பூஞ்சை/பூச்சித் தொல்லையைத் தடுக்க தீவனத்தை சேமிப்பதற்கான பொருத்தமான முறைகளும் இளைஞர்களுக்கு விளக்கப்பட்டது. கோழிகளின் தீவன விகிதம், கோழிகளின் இனப்பெருக்க சுழற்சியின் கொள்கைகள் மற்றும் அடிப்படை ஊட்டச்சத்து தேவைகள் பற்றிய விவரமும் பருவத்திற்கு ஏற்ப தீவனம் மற்றும் நீர் விநியோக செயல்முறை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியுடன் லீட் வங்கி, நபார்டு போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து ஆதரவைப் பெறுவதற்கான வழிகள் மற்றும் அரசு துறை மானியங்கள் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டன. நிலையத்தின் கோழிப் பண்ணை செயல்விளக்க திடலை பார்வையிட்டு, வரவு செலவு விவரங்கள், பல்வேறு இனங்கள் மற்றும் கோழி வளர்ப்பு முறைகள் குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. பங்கேற்ற இளைஞர்கள் எதிர்காலத்தில் வாழ்வாதாரத்திற்கான ஆதாரமாக கோழி வளர்ப்பு அலகுகளைத் தாங்களாகவே தொடங்க முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் சா.சுரேஷ், முனைவர் சா.நஸ்ரீன் ஹாசன் மற்றும் முனைவர் ஜே. செல்வி, ஓய்வுபெற்ற கால்நடை மருத்துவர் கிறிஸ்டோபால் ராய் மற்றும் முனைவர் ஜி.குமார், இளைஞர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 19வது வார்டுக்குட்பட்ட ஆசாரிபள்ளம் சானல் கரை பகுதியில் ரூ.5.10 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா மாநகர செயலாளர் ஆனந்த் மண்டல தலைவர் ஜவஹர் பகுதி செயலாளர் சேக் மீரான் மாநகர மாணவரணி அமைப்பாளர் முகமது சாலி, தி மு க நிர்வாகிகள் ரமேஷ் சேக் செய்தலி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஆனந்தா கல்லூரி தேசிய நூலக தின விழா

தேவகோட்டை, ஆக.22-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் தேசிய நூலக தின விழா கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நூலகர் உதவிப் பேராசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக உதவிப் பேராசிரியர் இராஜேஸ்வரி கலந்து கொண்டு தேசிய நூலக தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசியதாவது, புத்தகங்களைப் படிப்பதன் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். இறுதி யாக உதவி நூலகர் அல்போன்ஸ் மேரி நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் அனைத்து முதலாமாண்டு மாணாக்கர்களும் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாட்டினை நூலகத்துறை சார்பாக செய்திருந்தனர்.



# அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் தொடக்க விழா

வேலூர், ஆக.22-

வேலூர் அடுத்த, இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுகா, வேலூர் அடுத்த அரப்பாக்கம், அன்னை மிரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா, கல்லூரியின் நிறுவனவரும், தலைவருமான எஸ்.ராமதாஸ் மற்றும் செயலாளரும், பொருளாளருமான ஜி.தாமோதரன், ஆகியோர் தலைமையிலும்,கல்லூரி இயக்குநர்கள் பிரசாந்த், கிஷோர்குமார் ஆகியோர் முன்னிலையிலும், முதல்வர் கோபிநாதன் வரவேற்புரையாற்றுகையில் இவ்விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

எம்.எல்.ஏ. ஈஸ்வரப்பன் பேசுகையில்: ‘தமிழ்நாடு அளவில் அன்னை மிரா கல்லூரி 4வது இடம் பிடித்துள்ளது. கல்லூரியில் படிக்கும் போது ஒழுக்கம் மிக முக்கியம். இதை தவறவிட்டால், திருப்பி மீட்க முடியாது. கல்விதான் மிகப் பெரிய சொத்து, உடலையும், மனதையும் கட்டுப்பாட்டில் வைக்க வேண் டும். மனதளவில் சுத்தமாக இருக்க வேண்டும். கல்லூரி வாழக்கை திரும்ப கிடைக்காது. என்னமும், சிந்தனையும் தெளிவாக இருக்க வேண்டும் என பேசினார். இதனைத் தொடர்ந்து, கௌரவ விருந்தினராக திரைப்பட நடிகை ரோகினி, கலந்து கொண்டு பேசுகையில், ‘மாணவர்கள் அச்சப்பட தேவையில்லை என்ற வாக்குறுதியை இந்த கல்லூரி வழங்கியுள்ளது. திசை கண்டுபிடிக்க வேண்டும் பருவம் இது. கவன சிதறலை சந்தோஷமாக கொண்டாடி தான் இந்த காலகட்டத்தை கடந்து தான் போக வேண்டும். எந்த துறையை எடுத்து கொண்டாலும், அதற்கு பயிற்சி மிகவும் அவசி யம். உங்களுக்கு என்ன வேணும் என்ற தெளிவு கிடைத்தால், தான் வாழ்க்கையின் திருப்பு முனை இருக்கும். வெற்றியை நோக்கி பயணிக்கும் போது, கிடைக்கும் தோல்விகள் எல்லாம் அனுபவம்தான்’ என்றார். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கும் நிர்வாகம் சார்பில் கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவில், துணை முதல்வர் சரவணன், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் நிர்வாக அலுவலர் சாண்டில்யன் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.




# பள்ளிகொண்டாவில் இந்திய குடியரசு கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பட்டம்

வேலூர், ஆக.22-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா பேருந்து நிலையம் அருகில், இந்திய குடியரசு கட்சியின் சார்பில், நெல்லை கவீன் ஆணவப் படுகொலையை கண்டித்தும், ஆவணப் படுகொலைக்கு தனி சட்டம் இயற்றக்கோரியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இந்திய குடியரசு கட்சி மாவட்ட அமைப்பு செயலாளர் சுரேஷ்குமார் தலைமையிலும், டாக்டர். அம்பேத்கர் விழிப்புணர்வு சங்க செயலாளர் ஜெயபால் வரவேற்புரையாற்றுகையில், குடியாத்தம் ஒன்றிய செயலாளர் ராஜ்குமார், எம்.மது, சக்திவேல், மணிகண்டன், தயாளன் ஆகியோர் முன்னிலையில் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் வேலூர் மண்டல செயலாளர் இராசி. தலித்குமார் ஆர்ப்பாட்டத்தை தலைமையேற்று துவக்கி வைத்து கண்டனப் பேருரையாற்றினார். இதில் சிறப்பு அழைப்பாளராக இந்திய குடியரசு கட்சியின் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் சபாநாயகருமான டாக்டர். செ.கு. தமிழரசன் கலந்து கொண்டு கண்டன பேருரையாற்றினார். மேலும், இந்திய குடியரசு கட்சியின் மாநில பொறுப்பாளர்கள் கே.மாங்கா பிள்ளை, பி.எஸ்.கௌரிசங்கர், பி .தட்ராஜ், என்.ரமேஷ்குமார், எஸ்.மலராஜன், பௌத்த ஆராய்ச்சி மையம் மனோகரன் மற்றும் இந்திய குடியரசு கட்சியின் மாவட்ட நகர ஒன்றியம் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மகளிர் அணியினர் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் மற்றும் புதிய கட்டிடங்கள் திறப்பு விழா வருவாய் துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பங்கேற்பு



தென்காசி, ஆக.22-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கோதை நாச்சியார்புரம் கிராமம் பருவக்குடி கிராம ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு ரூ.33.35 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் மூலம் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த மாதங்களில் மட்டும் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி மக்களை பாதுகாக்கின்ற அரசாக இந்த அரசு உள்ளது. தென்காசி மாவட்டத்திற்கென நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் மேலநீலிதநல்லூர் ஆகிய வட்டாரங்களில் ரூ.1.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூட வகுப்பறை கட்டிடங்கள் மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், தென்காசி மாவட்டம் புளியரை அரசு மேல்நிலை ப்பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் 06 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், சீவநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் 06 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், மேலப்பாவூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், ரூ.98.96 இலட்சம் மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், சாயமலை அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.98.96 இலட்சம் மதிப்பீட்டில் 04 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், ஆவுடையானூர் பி.ஏ.பி.என் அரசு மேல்நிலைப்பள்ளியில் 03 கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், வேதம்புதூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கும், சுற்றுலா துறையின் சார்பில் கீழப்பாவூர் பெரிய குளத்தில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் படகு குழாம் அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

வருவாய்த்துறையின் மூலம் வீடற்ற 1586 பயனாளிகளுக்கு சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.8.23 கோடி மதிப்பீட்டிலான வீட்டுமனைப்பட்டாக்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் திட்டத்தின் மூலம் 100 பயனாளிகளுக்கு ரூ.5.00 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளும், முன்னாள் படைவீரர் நலன் அலுவலகத்தின் மூலம் முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு ரூ.1.96 கோடி மதிப்பீட்டிலான கடனுதவிகளும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 05 பயனாளிகளுக்கு ரூ.33,000/ மதிப்பீட்டிலான இலவச தையல் இயந்திரங்களும் வழங்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஜெ.கவிதா, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் லாலா பி.சங்கரபாண்டியன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பொன்முத்தையா பாண்டியன், கீழப்பாவூர் பேரூராட்சி தலைவர் பி.எம்.ராஜன், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்செல்வம், மல்லிகா, சங்கர ன்கோவில் வட்டாட்சியர் பரமசிவம், செயற் பொறியாளர் (கட்டிடம் மற்றும் பராமரிப்பு) அனிட்டா சாந்தி, உதவி செயற்பொறியாளர் ஜான் ஆசிர், உதவி பொறியாளர் .அசோக், உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சித்துறை) செண்பகக்கனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சோழிங்கநல்லூர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 55 லட்சத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு விழா

சோழிங்கநல்லூர், ஆக.22-

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் வார்டு எண் 186 புழுதிவாக்கம் தந்தை பெரியார் உயர்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினரின் 2023-2024 ஆம் ஆண்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் (55.லட்சம்) மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை (ஆகஸ்ட் 20) சோழிங்கநல்லூர்.,எம்.எல்.ஏ., ச.அரவிந்த் ரமேஷ் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழக செயலாளர், 14வது மண்டலக்குழு தலைவர், எஸ் .வி.ரவிச்சந்திரன்,186வது வார்டு மாமன்ற உறுப்பினர்,வரி விதிப்பு (ம) நிதிக்குழு உறுப்பினர், 186வது வட்டக் கழக செயலாளருமான, ஜே. கே. மணிகண்டன் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் பள்ளி மாணவ, மாணவிகள் உடன் இருந்தனர்.



# விசைப்படகில் சிக்கிய புலி இறால் ரூ.8000க்கு ஏலம்

கன்னியாகுமரி, ஆக.22-

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் கொட்டில்பாட்டை சேர்ந்த அகிலன் என்பவர் ஆழ்கடலில் மீன்பிடித்து குளச்சல் துறைமுகத்திற்கு திரும்பியிருந்தார்.

அவரது வலையில் கணவாய், நாக்கண்டம் மீன்களுடன் அரியவகை புலி இறால் ஒன்று சிக்கியது.

2.800 கிலோ எடை கொண்ட இந்த புலி இறாலுக்கு வெளிநாட்டில் அதிக மவுசு உள்ளதால் மீனை தனியாக உயிருடன் கடல் நீர் கலந்த பெட்டியில் போட்டு ஏலம் விட்டனர். இந்த மீனை வாங்க பலர் போட்டி போட்ட நிலையில் ரூ.8000 க்கு ஏலம் போனது.

## சிவகங்கை மாவட்டம் இந்திய விமானப்படையில் அக்னிபாத் திட்டத்தின் கீழ்

# அக்னிவீர் வாயு நேரடி ஆட்சேர்ப்புக்கான தேர்வு வருகின்ற 2.9.2025 அன்று ஆண்களுக்கும் மற்றும் வருகின்ற 5.9.2025 அன்று பெண்களுக்கும் குறிப்பிட்டுள்ள முகவரியில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்




சிவகங்கை, ஆக.22-

இந்திய விமானப்படையில் அக்னிபாத் திட்டத்தின் கீழ் அக்னிவீர் வாயு நேரடி ஆட்சேர்ப்புக்கான தேர்வு 8, ASC Air Force Station, (Air Force Road) தாம்பரம், சென்னை 600046 என்ற முகவரியில் வருகின்ற 2.9.2025 அன்று ஆண்களுக்கும் மற்றும் 5.9.2025 அன்று பெண்களுக்கும் நடைபெறவுள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்வதற்கு 12 ஆம் வகுப்பு / சமமான கல்வித்தகுதியில் 50 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருப்பதுடன், ஆங்கிலம் பாடப்பிரிவிலும் 50 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். மேலும், அக்னிவீர் வாயு நேரடி ஆட்சேர்ப்பில் பங்குபெற 1.1.2026 அன்று 17 1/2 வயதிற்கு மேற்பட்டவராகவும் 21 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு www.agnipathvayu.cdac.in என்ற இணையதள முகவரியின் வாயிலாகவோ அல்லது சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது 04575 240435 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



## தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் 4வது மண்டலம் 56வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்

# சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கர்பினி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகத்தையும், முகாமை ஆய்வு செய்து பிறப்பு, இறப்பு சான்றிதழ்களைகளை வழங்கினார்

பெருங்களத்தூர், ஆக.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் 4வது மண்டலம் 56வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர் எஸ்.சேகர், மாமன்ற உறுப்பினர் புகழேந்தி கலந்து கொண்டு கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகம் வழங்கியும் முகாமை ஆய்வு செய்து பிறப்பு, இறப்பு சான்றிதழ், மின்சார பெயர் மாற்றம், சொத்துவரி பெயர்மாற்ற சான்றிதழகளை வழங்கினார். இதில் திமுக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அரசு அதிகாரிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161